கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண்.105/2021

நாள்.04.08.2025

வா.சா.1 – முத்து கிருஷ்ணன்
த/பெ – ராமசாமி நாடார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) இந்த வழக்கின் 2ம் பிரதிவாதி என் தகப்பனார் ஆவார். நான் 6ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் எழுத படிக்க தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிராது முதலில் ஆங்கிலத்திலும், பின்னர் தமிழிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பிராது ஆங்கிலத்தில் இருப்பதால் வழக்கறிஞர் எனக்கு அதை மொழி பெயர்த்து சொன்னாரா என்றால் சொல்லவில்லை. இரண்டாவது தமிழில் தாக்கல் செய்தது பற்றி எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள முதல் பிராதில் என்னுடைய முகவரியும் 2ம் பிரதிவாதியின் முகவரியும் ஒன்று என்றால் சரிதான், ஆனால் நான் தனியாக இருந்து வருகிறேன். நான் தற்போது பிராதை சீர்திருத்தம் செய்து வேறு முகவரி மாற்றிவிட்டேன் என்றால் சரிதான். பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்புதான் பிராது முகவரியை திருத்தம் செய்தேன் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. நானும், 2ம் பிரதிவாதியும் சேர்ந்து தான் இவ்வழக்கை ஒரே முகவரியில் வசித்து தாக்கல் செய்துள்ளோம் என்று எதிர்வழக்குரையில் கூறப்பட்டதால்தான் முகவரியை திருத்தம் செய்தோம் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த காலத்தில் என்னுடைய ஆதார் அட்டை என்ன முகவரியில் இருந்தது என்பதை குறித்து ஆதார் அட்டையை தாக்கல் செய்ய தயாராக



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.08.04 16:51:48 +0530

உள்ளேன் என்றால் தயாராக உள்ளேன்.

2) நான் இவ்வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் இவ்வழக்கின் சொத்து எனது பாட்டியின் சொத்து என்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். வழக்கின் சொத்து எனது பாட்டியின் சொத்து என விளம்புகை பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் கோரியுள்ளேன். பிராதின் தபசில் சொத்து எனது பாட்டிக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். பிராதின் தபசில் சொத்து எனது பாட்டிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதற்கு எதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது 1ம் பிரதிவாதி தங்கராஜிடம் உள்ளது. வழக்கு சொத்து எனது பாட்டியின் சொத்து என்பதை குறித்து ஆவணங்கள் நகல் எடுக்க முயற்ச்சித்தேனா என்றால் முயற்சித்தேன் அச்சமயம் பாட்டியின் இறப்பு சான்றிதழ் இல்லாததால் நகல் எடுக்க முடியவில்லை. எனது பாட்டிற்கு வழக்கு சொத்து எப்படி கிடைத்தது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது பாட்டியின் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தையோ அல்லது நன்கொடை ஆவணத்தையோ எடுக்க இறப்பு சான்றிதழ் தேவை இல்லை என்றால் சரியல்ல.

3) எனது பாட்டியின் பெயரில் உள்ள வருவாய் ஆவணங்கள் எதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அனைத்தும் 2ம் பிரதிவாதியான எனது தகப்பனாரிடம் உள்ளது. வழக்கு சொத்து சம்மந்தமாக கிராம நிர்வாக அலுவலரை விசாரித்தால் வழக்கு சொத்து யார் பெயரில் உள்ளது என்ற விவரம் தெரிய வரும் என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலரை விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். இந்த வழக்கு சொத்து சம்மந்தமாக அ பதிவேடு நான் பார்வையிட்டுள்ளேனா என்றால்



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.08.04 16:51:53 +0530

பார்வையிட்டுள்ளேன், அது என் பெயரில் தான் உள்ளது. தில்லை சிதம்பர நாடார் எனது தாத்தா, சீதாலெட்சுமியின் கணவர் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து தில்லை சிதம்பர நாடார் எனது தாத்தாவிற்கு பாத்தியம் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தானது எனது தாத்தா தில்லை சிதம்பர நாடாருக்கு உரியது என்றும் அதனால் தான் அ பதிவேட்டில் அவர் பெயர் உள்ளது என்றால் சரியல்ல.

4) தில்லை சிதம்பர நாடாருக்கு மொத்தம் 3 பிள்ளைகள், 2 பெண் மக்கள், 1 ஆண் மகன். தில்லை சிதம்பர நாடாரின் 2 பெண் மக்கள் வழக்கு சொத்து சம்மந்தமாக பாகபிரிவினை வழக்கு தொடுத்தனர் என்றால் சரியல்ல. தில்லை சிதம்பர நாடாரின் 2 பெண் மக்களுக்கு வழக்கு சொத்தில் பங்கு உள்ளதா என்றால் உயிலின்படி பங்கு இல்லை. 80 வருடங்களுக்கு தில்லை சிதம்பர நாடாரின் சொத்தை குறித்து ஒரு கொலை நடந்தது என்பதை பற்றி தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு சொத்தானது தில்லை சிதம்பர நாடாரின் பூர்விகசொத்து எனது பாட்டி சீதாலெட்சுமிக்கு அதில் தனித்த உரிமை கிடையாது என்றால் சரியல்ல.

5) எனது பாட்டியின் பெயரில் தனித்த ஆவணங்கள் தாக்கல் செய்யாததால் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல, எனது பாட்டி எனக்கு எழுதி கொடுத்த உயிலின்படி வழக்கு செல்லும். எனது தாயின் பெயர் ஜெயகனி. எனது தாய்மாமன் பெயர் கணபதி ஆகும். எனது தாய்மாமாவிற்கு கடன் சுமை இருந்தது என்றால் தெரியவில்லை. எனது தாய்மாமா வாழைக்காய் வியாபாரம் செய்து வந்தார். எனது தாய்மாமா மீது பழவூர் காவல் நிலையத்தில் குற்ற புகார் நிலுவையில் இருந்தது பற்றி



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.08.04 16:51:59 +0530

தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி குற்றபுகாரை தடுப்பதற்கு 2 லட்சம் ரூபாய் பணம் தேவைபடுகிறது என்று 2 ம் பிரதிவாதியான என் தகப்பனார் பிறறிடம் பணம் கேட்டார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது நான் அச்சமயம் வெளிநாட்டில் இருந்தேன். அச்சமயம் 2 ம் பிரதிவாதியான என் தகப்பனார் 1 ம் பிரதிவாதி தங்கராஜிடம் கடன் கேட்டாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

(குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.08.04 16:52:05 +0530